Deposition of Witness Page.No.
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE KATPADI

Case No CMP.2758/2022

Deposition of Witness for DW1

Name : பூங்கோதை

Husband's Name : சுந்தரேசன்

Village : மேல்மாயில்

Occupation : தலைமை ஆசிரியர் (ஓய்வு)

Age : 69

Solemnly affirmed in accordance with the provisions of Sec 3 and 4 of the Indian Oaths Act 1969 r/w rule 35,36 of Criminal rules of practice 2019. 03.09.2022

---

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

முதல் விசாரணை:

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து தலைமை ஆசிரியராக இருந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 1.9.2017 ஆம் தேதி காலை 11 மணிக்கு முருகன் குடும்பத்தார் தங்கள் வீட்டு கழிவு நீரை நாங்கள் சென்றுவரும் பாதையில் விட்டதை கேட்டு அதை மூடினோம். இது தொடர்பாக போலீசாரிடம் சென்றார். நாங்களும் பதிலுக்கு புகார் அளித்தோம். ஆனால் போலீசார் முருகன் குடும்பத்தாரிடம் பணம் பெற்று எனது மகளை வீட்டிடம் வந்து தொந்தரவு கொடுத்தார்கள். எனவே நாங்கள் முன்ஜாமீன் தாக்கல் செய்திருந்தோம். அதில் எனது மகன் மீது வழக்கு ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை என்று அரசு தரப்பில் பதில் தாக்கல் செய்யப்பட்டதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

2. பின்னிட்டு 26.10.2017 ஆம் தேதி இரவு 7 மணியளவில் போலீசார் எங்கள் வீட்டில் நுழைந்து எனது மகளை அடித்து இழுத்து சென்றார்கள். இரவு 10.45 மணிக்கு ஆய்வாளர் தீபா வந்து எனது மகனை வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். மறுநாள் நாங்கள் காவல் நிலையம் சென்றபோது போன் செய்தால் மட்டும் வருமாறு கூறினார்கள். எனது மகனை அடித்து காவல் நிலையம் இழுத்து சென்றது தொடர்பாக மனித உரிமை ஆணையத்தில் 1.11.2017 அன்று புகார் அளித்தேன். அவர்கள் 2018 ஜனவரி மாதம் குடியாத்தம் டிஎஸ்பி விசாரணை செய்ய உத்தரவிட்டார். டிஎஸ்பி ஆய்வாளர் தீபாவை விசாரணைக்கு அழைத்தார். ஆனால் ஆய்வாளர் தீபா எங்களை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் அழைத்து சென்றார். செல்லும் வழியில் அவர் போலீசிடம் பகைத்து கொள்ளாதீர்கள். உங்கள் மகனின் வாழ்க்கை அழித்துவிடுவோம். அங்கு வந்து போலீஸ் எங்களை அடிக்கவில்லை என்று சொல்லும்படி மிரட்டினார்கள். பின்பு விசாரணையில் நாங்கள் போலீசார் அடித்த விவரத்தை காவல்

கண்காணிப்பாளரிடம் சொன்னோம். அவர் வழக்கு பதிவு செய்யாமல் எப்படி கைது செய்ய சென்றீர்கள் என்று ஆய்வாளரை கேட்டபோது அவர் மேற்படி விவகாரத்தை காவல் நிலையத்தில் வைத்து சமாதானம் செய்து கொள்வதாக கூறி அழைத்து சென்றுவிட்டார்.

3. பின்னிட்டு அதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவல்லை என்பதால் மனித உரிமை ஆணையத்தில் நான் அளித்த மனு மீது நடவடிக்கை எடுக்கும்படி மீண்டும் மனு செய்ததால், மீண்டும் 6.3.2018 அன்று விசாரணைக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்குவரும்படி அழைப்பு வந்தது. நாங்கள் சென்றபோது அங்கு போலீசார் தரப்பில் யாரும் வரவில்லை. காவல் கண்காணிப்பாளரிடம் நடந்த விவரத்தை கூறி போலீசார் இதுவரை வரவில்லை என்று கூறினோம். காவல் கண்காணிப்பாளர் யார் எனது மகனை அடித்தது என்று கேட்டபோது, பாலாஜி என்ற போலீசும், காசி என்ற ஏட்டும் அடித்ததாக கூறினோம்.

4. பிறகு காவல் கண்காணிப்பாளர் கே.வி.குப்பம் உதவி ஆய்வாளர் கார்த்திகை செல்வனுக்கு போன் செய்து உடனடியாக சம்பவ இடம் சென்று விசாரணையை தொடங்கும்படி உத்தரவிட்டார். ஆனாலும் அவர் விசாரணை செய்யாததால் மீண்டும் கிடப்பில் போடப்பட்டது. எனவே கணம் நீதிமன்றம் மேற்படி போலீஸ் அதிகாரிகள் மீது விசாரணைக்கு உத்தரவிட்டு உரிய தண்டனை பெற்று தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.